# “தொகுதி பார்வையாளர்கள்” நியமனம்

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

| சட்டமன்றத் தொகுதி | தொகுதி பார்வையாளர் |
|---|---|
| வேதாரண்யம் | வி.ஜெயபிரகாஷ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் |
| திருவிடைமருதூர், (தனி) | ந.செந்தில், மாநில இலக்கிய அணி புரவலர் |
| கும்பகோணம் | கே.மறைமலை, தலைமைக் கழக வழக்கறிஞர் |
| பாபநாசம் | பி.எம்.ஆனந்த், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் |
| திருவையாறு | பி.கேசவன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் |
| தஞ்சாவூர் | ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாய அணி செயலாளர் |
| ஒரத்தநாடு | பரணி இ.ஏ.கார்த்திகேயன், மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் |
| பட்டுக்கோட்டை | டாக்டர்.சி.குறிஞ்சிவாணன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் |
| பேராவூரணி | சுப.சரவணன், மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் |
| திருத்துறைப்பூண்டி, (தனி) | என்.வி.காமராஜ், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் |
| மன்னார்குடி | ராஜா சீனிவாசன்,<br>தஞ்சை வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் |
| திருவாரூர் | எஸ்.கே.வேதரத்தினம், மாநில விவசாய அணி துணைத் தலைவர் |
| நன்னிலம் | ஜித்து (எ) ராஜரத்தினம், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் |
| கந்தர்வக்கோட்டை (தனி) | கார்த்திகேயன் வேலுசாமி, மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் |
| விராலிமலை | டாக்டர் அஞ்சுகம் பூபதி எம்.டி., மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் |
| புதுக்கோட்டை | வண்ணை அரங்கநாதன்,<br>மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை செயலாளர் |
| திருமயம் | ஜி.பி.ராஜா (எ) பிரதீப்ராஜா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் |
| ஆலங்குடி | சுப.த.சம்பத், மாநில சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர் |
| அறந்தாங்கி | சுப.த.திவாகரன், மாநில தீர்மானக்குழு துணைத் தலைவர் |
| பழநி | அதலை செந்தில் குமார், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் |
| ஆத்தூர் | என்.மணிராஜ், மாநில சட்டத் துறை இணைச் செயலாளர் |
| நிலக்கோட்டை (தனி) | கம்பம் இரா.பாண்டியன், கொள்கைப் பரப்புக்குழு துணைச் செயலாளர் |
| திண்டுக்கல் | கோவிந்தசாமி, மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர், |
| ஒட்டன்சத்திரம் | பரணி கே.மணி, மாநில நெசவாளர் அணிச் செயலாளர் |
| நத்தம் | கே.ஆர்.ரஞ்சன்துரை, மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் |
| வேடசந்தூர் | வே.பல்லவிராஜா, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் |
| காரைக்குடி | முதுகுளத்தூர் முருகவேல், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் |
| திருப்பத்தூர் | டாக்டர் சுந்தரராஜ், மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் |
| சிவகங்கை | சு.சண்முகம், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் |
| மானாமதுரை | கே ஆர் என் போஸ்,<br>மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் |
| மேலூர் | இரா.கிருஷ்ணகுமார், விருதுநகர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் |
| மதுரை கிழக்கு | எஸ்.செல்வகுமார், தேனி வடக்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் |
| சோழவந்தான், (தனி) | நாகனி செந்தில்குமார், சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் |
| மதுரை வடக்கு | கம்பம் பெ.செல்வேந்திரன், மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் |
| மதுரை தெற்கு | எம்.ஜெயக்குமார், மாநில தீர்மானக்குழு இணைச் செயலாளர் |
| மதுரை மத்தி | வி.பி.இராசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் |
| மதுரை மேற்கு | டாக்டர்.ஆர்.கே.திலிப்குமார், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் |
| திருப்பரங்குன்றம் | சிவகாசி த.வனராஜா, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் |
| திருமங்கலம் | டிஸ்கோ.எம்.அலாவுதீன், தேனி தெற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் |
| உசிலம்பட்டி | ப.செல்லதுரை, விருதுநகர் வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் |
| பெரியகுளம், (தனி) | ம.முத்துராமலிங்கம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் |
| போடிநாயக்கனூர் | சி.நேரு பாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் |
| ஆண்டிப்பட்டி | இரா.முத்துக்குமார், மதுரை மாநகர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் |
| கம்பம் | வி.ஜெயன், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் |
| சிவகாசி | செண்பகவிநாயகம், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் |
| விருதுநகர் | திரு மதுரை பாலா, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் |
| திருச்சுழி | திருமதி.பவானி ராஜேந்திரன், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் |
| இராஜபாளையம் | க.தனசெல்வம், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் |
| திருவில்லிபுத்தூர், (தனி) | ப.ஆ.சரவணன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் |
| சாத்தூர் | வ.து.ந.ஆனந்தன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் |
| அருப்புக்கோட்டை | மாரியப்பன் கென்னடி, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் |
| பரமக்குடி, (தனி) | கொடி சந்திரசேகர், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் |
| திருவாடாணை | அருண், மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் |
| இராமநாதபுரம் | மருத்துவர் எஸ்.சுதர்சன், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் |
| முதுகுளத்தூர் | வேல்முருகன், விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் |
| விளாத்திகுளம் | எஸ்.பெருமாள், மாநில நெசவாளர் அணி செயலாளர் |
| தூத்துக்குடி | இன்பா ரகு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் |
| கோவில்பட்டி | ஆர்.கணேசன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் |
| திருச்செந்தூர் | டாக்டர் சபி, மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் |
| ஸ்ரீவைகுண்டம் | மரு சுரேஷ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் |
| ஒட்டப்பிடாரம், (தனி) | அருப்புக்கோட்டை க.பழனிச்சாமி, மாநில நெசவாளர் அணிச் செயலாளர் |
| அம்பாசமுத்திரம் | வி.ஜோசப் ராஜ்,<br>மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் |
| நாங்குநேரி | என்.சுரேஷ்ராஜன், தணிக்கைக்குழு உறுப்பினர் |
| இராதாபுரம் | எம்.சிவராஜ், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் |
| திருநெல்வேலி | திருமதி.எஸ்.முத்துச்செல்வி, முன்னாள் எம்.எல்.ஏ., மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் |
| பாளையங்கோட்டை | வசந்தம் ஜெயக்குமார், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் |
| சங்கரன்கோவில், (தனி) | பி.எம்.ராமஜெயம், தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் |
| வாசுதேவநல்லூர், (தனி) | தனுஷ் எம்.குமார், விருதுநகர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் |
| கடையநல்லூர் | நௌஷாத், திருநெல்வேலி மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளர் |
| தென்காசி | டாக்டர் கலை கதிரவன், எம்.பி.பி.எஸ்., மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் |
| ஆலங்குளம் | கணேஷ்குமார் ஆதித்தன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் |
| கன்னியாகுமரி | ஸ்ரீதர் ரொட்ரிகோ, தூத்துக்குடி தெற்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் |
| நாகர்கோவில் | எஸ்.ஆனந்த், தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் |
| குளச்சல் | வி.பி.செல்வகுமார், தூத்துக்குடி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் |
| பத்மனாபபுரம் | திருமதி.விஜிலா சத்யானந்த்,<br>மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் |
| விளவங்கோடு | சி.எம்.மதியழகன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் |
| கிள்ளியூர் | ஆவின் எம்.ஆறுமுகம், மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் |

- சட்டமன்றத் தொகுதியின் பார்வையாளராக மேற்கண்டவாறு நியமிக்கப்பட்டுள்ளவர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிக்குரிய கழக மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர்களுடன் கலந்து பேசி அவர்களுக்கு உதவிடும் வகையில் கிளை/பூத் வாரியாக தொடர்பு கொண்டு BLA-2 மற்றும் பூத் கமிட்டி அமைக்கும் பணிகள் குறித்த தலைமைக் கழக அறிவுறுத்தலை முழுமையாகச் செயல்படுத்திட வேண்டும்.
- வாக்காளர் பட்டியல் சரிபார்த்து, புதிய வாக்காளர்களைச் சேர்த்தல் மற்றும் பெயர்கள் நீக்கல் - திருத்தம் செய்தல் உள்ளிட்ட தேர்தல் பணிகளை நேரடியாக ஆய்வு செய்து, மேற்கொள்ளும் பணி விவரங்களை வாரம் ஒரு முறை தலைமைக்கழகத்திற்கு அறிக்கையாக சமர்ப்பித்திட வேண்டும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 07.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### 2025ஆம் ஆண்டு! 2ஆம் நாளான திருவள்ளுவர் திருநாளில்

# ‘முத்தமிழறிஞர் கலைஞர் விருது’ வழங்கப்படுகிறது!

## விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன! தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.9 - 2025-ஆம் ஆண்டு, 2-ஆம் நாளான திருவள்ளுவர் திருநாளில் புதியதாக “முத்தமிழறிஞர் கலைஞர் விருது” வழங்கப்படவிருக்கிறது. இவ்விருதுக்கு தமிழுக்கு தொண்டாற்றியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழினத் தலைவர் என்று உள்ளத்தின் மொழியால் அன்பாக அழைக்கப்படும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த் திருப்பணிகளை போற்றும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றித் தாய்த்தமிழுக்குத் தொண்டாற்றும் அறிஞர் ஒருவருக்கு ‘முத்தமிழ றிஞர் கலைஞர் விருது‘ என்ற புதிய விருது தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தகைமையும் பெருமையும் உடைய இவ்விருது பெறும் அறிஞருக்கு விருதுத் தொகையாக ரூபாய் பத்து இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், பொன்னாடை, தகுதியுரை ஆகியன வழங்கிச் சிறப்பிக்கப்பெறும் என 2024 - 2025ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2025ஆம் ஆண்டு 2ஆம் நாளான திருவள்ளுவர் திருநாளில் வழங்கப்படும் திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகிய விருதுகளோடு புதிய விருதான முத்தமிழறிஞர் கலைஞர் விருதும் இணைந்து வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்தமிழறிஞர் கலைஞர் அடியொற்றி தமிழுக்குத் தொண்டாற்றிய தகைமையும் தொண்டறமும் பூண்ட பெருமக்களிடமிருந்து விண்ண ப்பங்கள் வேண்டப்படுகின்றன.

www.tamilvalarchithurai.tn.gov.in/awards மற்றும் http://awards.tn.gov.in என்ற இணைய தளங்களின் வழியாகவோ அல்லது www.tamilvalarchithurai.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து, அவற்றை நிறைவு செய்து தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை-600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாக 30.10.2024-ஆம் நாளுக்குள் தக்க ஆவணங்களோடு விண்ணப்பங்களை அனுப்பிட வேண்டுகின்றோம்.


கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044-28190412, 044-28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (30.10.2024) பெறப்படும் விண்ணப் பங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆர்.ஏ. வீராசாமி**

**அக்டோபர் 9 (2020)**



தனது இளம் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

மாவட்டப் பிரதிநிதியாகவும், நாகை நகரக் கழகச் செயலாளராக இரு முறையும் பொறுப்பு வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

நாகை நகர வீடு கட்டுவோர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் – நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து நடத்தியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# 32 ஆம் ஆண்டு நினைவு தினம்

முன்னாள் ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட

**தி.மு.க.அவைத்தலைவர்**



**திரு.R.கோபால்சாமி**

*அவர்களின் நினைவுகளுடன் வணங்குகிறோம்...*

**திரு. கோ.தளபதி MLA.**

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி

**செயலாளர் ~ மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.**